வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்.

ந.க.எண். 4582/ஆ2/2025, நாள். .05.2026

பொருள்: பள்ளிக்கல்வி சார்நிலைப்பணி - 01.06.1988 முதல் 31.12.1995 வரை உள்ள காலங்களில் தேர்வுநிலை அல்லது சிறப்பு நிலை பெற்ற ஓய்வுப்பெற்ற இடைநிலை ஆசிரியர் மற்றும் சிறப்பாசிரியர்களுக்கு தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கான ஊதிய விகிதத்தில் கருத்தியலாக ஊதிய நிர்ணயம் செய்து 01.03.2017 முதல் திருத்திய ஓய்வூதியம் வழங்கப்பட்டது - 01.03.2017க்குப் பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் விவரம் கோருதல் - சார்ந்து.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண். 216, நிதித்துறை (ஊதிய நிர்ணயம்) நாள். 22.03.1993
2. அரசாணை நிலை எண். 90, பள்ளிக்கல்வித் (ப.க3(1) துறை நாள். 09.05.2018.
3. மாநில கணக்காயரின் கடிதம் ந.க.எண். EM/II-1-61-G.O./2025-26/4900 . நாள். 29.07.2025.
4. அரசுக் கடிதம் (efile) எண். 7273/பக3(1)/2025-1, நாள். 23.09.2025.
5. சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (ப.தொ) அவர்களின் செயல்முறைகள். ந.க.எண். 33173/சி5/இ2/2025, நாள். .11.2025, .05.2026.

******

பார்வை 2-ல் காணும் அரசாணையின்படி, பள்ளிக்கல்வி துறையில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்களுக்கு 01.06.1988 முதல் 31.12.1995 வரையிலான 5வது ஊதிய திருத்த காலத்தில், தேர்வு / சிறப்பு நிலை எய்தவர்களுக்கு மட்டும் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடத்திற்கான தேர்வு நிலை / சிறப்பு நிலை எய்தவர்களுக்கு மட்டும் தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் பணியிடத்திற்கான தேர்வு நிலை / சிறப்பு நிலை ஊதிய விகிதத்தில் கருத்தியலாக ஊதிய நிர்ணயம் செய்து, அதனடிப்படையில் ஓய்வு பெற்ற கடைசி நாளில் பெறக்கூடிய அடிப்படை ஊதியத்தினை கருத்தியலாகக் கணக்கிட்டு அதனடிப்படையில் 01.03.2017 முதல் முன் தேதியிட்டு திருத்திய ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் அனுமதித்திடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 5ல் காணும் அரசு கடிதத்தில் அரசாணை (நிலை)எண். 90, பள்ளிக்கல்வி (ப.க3(1)த் துறை நாள். 09.05.2018இல் வழக்கு தொடர்புடைய மனுதாரர்களுக்கு மட்டுமே பொருந்தும் என குறிப்பிட்டுள்ள நிலையில் 01.03.2017க்குப் பின் ஓய்வு பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் / சிறப்பாசிரியர்கள் இவ்வழக்குகளில் தொடர்புடையவர்களா என்பதையும் இவ்வாசிரியர்களுக்கு மேற்காண் அரசாணை பொருந்துமா என்பது குறித்த விவரத்தினை அளிக்க கோரப்பட்டுள்ளது.

எனவே, அரசுக்கு விவரங்கள் குறிப்புரை வழங்கும் பொருட்டு மேற்காண் பொருள் சார்ந்து வழக்கு தொடரப்பட்ட மனுதாரர்களில் 01.03.2017க்குப் பின் ஓய்வு பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் / சிறப்பாசிரியர்கள் விவரத்தை பள்ளி ஆவணங்களின் அடிப்படையில் இணைப்பில் உள்ள படித்தில் பூர்த்தி செய்து நாளை மாலை 6.00 மணிக்குள்

Scanned with OKEN Scanner

இவ்வலுவலகத்தில் படிவத்தினை சமர்ப்பித்திடுமாறும், எவரும் இல்லை எனில் இன்மை அறிக்கையினை அளிக்குமாறும் அனைத்து அரசு / உயர்நிலை / மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு – படிவம்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

18/5/26

பெறுநர்

அரசு உயர்நிலை / மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

Scanned with OKEN Scanner